**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**
**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**
**<u>O.S.No.473/2020</u>**

பெயர் : சசிகுமார் (PW2)

த/பெ. : பாலு.

தேதி : 20.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

கீர்த்தி வாசனை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு 7 , 8 ஆண்டுகளாக வாதி கீர்த்தி வாசனை தெரியும். தாவ சொத்தில் வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. எனது முதல் விசாரணையில் கட்டுமானம் செய்த வருடம் மாதம் சொல்லியுள்ளேன் எதனை பார்த்து சொன்னேன் என்று தெரியவில்லை. நான் குறிப்புகளை பார்த்து சொல்லவில்லை. கீர்த்திவாசனின் சொத்தின் சர்வே எண் தெரியுமாஎன்றால் தெரியாது. சொத்தினை அளந்து பார்த்தீர்களா என்றால் சொத்தின் நீலம் அகலம் தெரியாது., சொத்தின் அளவும் தெரியாது என்றால் சரிதான். ஒரு சொத்தில் எல்லையில் கட்டிடம் கட்டினோம் என்றால் கட்டிடம் சொத்தில் எல்லைக்குள் கட்டுகிறோமா அல்லது அதனை தாண்டி கட்டினோமா என்று பார்க்க வேண்டும் என்றால் சரிதான். நான் தாவா சொத்தினை அளந்தீர்களா என்றால் கட்டுமானம் செய்வதற்கு முன்பு அளந்து பார்த்தேன்.சொத்தினை அளக்கும்போது சொத்தின் நீலம் அகலம் தெரிந்திருக்க வேண்டும். சொத்தில் நீல அகலம் தெரியுமா என்றால் தெரியாது. ஏதாவது ஆவணத்தினை வைத்து அளக்க வேண்டும். அவ்வாறு ஆவணங்களும் கிடையாது. தாவா சொத்தின் அளவு தெரியாது. எந்த ஆவணத்தை வைத்து அளந்தீர்கள் என்றால் அவர்கள் சொன்னதை வைத்து அளந்தேன். ஆவணத்தை பார்க்க வில்லை. தாவாசொத்து மயிலாடுதுறை நகர எல்லைக்குள் உள்ள சொத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் இருந்தால் தான் கட்டுமானம் செய்யலாம் என்றால் சரிதான். வாதி வீடு கட்ட நகராட்சியில் வரைபடம் அங்கீகாரம் வாங்கியுள்ளாரா என்று தெரியவில்லை.

அவரது வீட்டின் தென்புற சுவற்றிலிருந்து எவ்வளவு அடி தள்ளி உள்ளது என்றால் 6 அடி தள்ளி அவருடைய பொழி உள்ளது. அந்த 6 அடி எதை வைத்து கண்டுபிடித்தீர்கள் என்றால் சர்வேகல் சர்வே மேப் பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. மேப்பையும் பார்க்கவில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் என்ன தகராறு என்று தெரியுமா என்றால் வாதி காம்பவுண்ட் சுவற்றினை பிரதிவாதி இடத்தில் கட்டிவிட்டாக பிரச்சனை. இந்த வழக்கில் நில அளவையர் வைத்துதான் அளந்துபார்த்து காம்பவுண்ட் சுவர் பிரதிவாதி இடத்தில் உள்ளது என அறிக்கை கொடுத்துள்ளார் அ்துப்ற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வாதி எனக்கு வேண்டியவர்

என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்லகிறேன் என்றால் சரியல்ல. Hi foundation போடவேண்டும் என்றால் அடுத்த வீட்டு காரர்களுக்கு தகவல் சொல்லித்தான் போடவேண்டும் என்றால் சரிதான். ஏதாவது தெரிவித்தீர்களா என்றால் அவ்வாறு தெரிவிக்கவில்லை. Hi foundation கட்டிடத்திற்கு போடுவார்களா என்றால் காம்பவுண்டுக்கு போடுவார்கள். அவ்வாறு 12 பில்லர்கள் போட்டுள்ளேன். காம்பவுண்ட் சுவர் கட்டும்போது இந்த பிரதிவாதி ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால் தெரிவித்தார்கள். அதன் பின்னரும் முறையாக சர்வேயரை வைத்து அளந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ஆட்சேபனை தெரிவித்ததும் கட்டிடம் கட்டாமல் வேலை நின்றுவிட்டது. எத்தனை காலம் நின்றுவிட்டது என்றால் ஒரு ஆண்டு காலம் கட்டுமான பணி நின்றுவிட்டது.

அதன் பின்னர் சர்வேயர் வந்து அளந்தார்களா என்றால் அதன் பின்னர் சர்வேயர் வந்து அளந்து கல் போட்டதாக கீர்த்திவாசன் சொன்னார். அந்த கல்லை பார்த்தீர்களா முன்பக்கம் ஒரு கல்லும் பின் பக்கம் ஒரு கல்லும் போடப்பட்டுள்ளது. அந்த கட்டுமான சொத்திற்கு கீழ் புறம் யார் உள்ளார்கள் என்று தெரியாது. கீழ் புறம் பொழியில் கல் போடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த கீழ்புற எல்லையில் கல் வைத்துபோது அதன் கிழக்கால் உள்ள உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. அவ்வாறு ஒரு வருடம் பிரதிவாதி தடுத்தார் என்பதை எனது முதல் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. வாதிக்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.